**கவனிக்க.-** *20.08.2010 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி III மற்றும் பகுதி IV (அ) என்பன பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் காலாண்டிற்கான (2007, ஒற்றோபர்-திசெம்பர்) புத்தகப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV(ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரிசுரிக்கப்பட்டுள்ளன.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1669 - 2010 අගෝස්තු මස 27 වැනි සිකුරාදා - 2010.08.27**

*1669 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1294 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் – வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை – நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இணைப்பு 3*

# மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண சபை**

*களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம்*

*(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் மூலம் அளிக்கப்பட்ட தத்தவங்களைக் கொண்டு கொபைகனே பிரதேச சபையினால் நிறைவேற்றப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை அதன் பிரிவு (2) உப பிரிவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வடமேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சரினால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது என அதன் உப பிரிவின் மூலம் இத்தால் பிரசுரிக்கப்படுகிறது.*

**பிரேரணை**

*2009.08.26 ஆந் திகதி கொபைகனே பிரதேச சபை பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடந்த மாதாந்த பொதுக் கூட்டத்தில் கருத்துக்களை அங்கீகரித்தவாறு வினோத வரி சட்ட திட்டத்தின் இரண்டாம் பிரிவின் 1 ஆம் உப பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி கொபைகனே பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் நடாத்தப்படும் அந்த சட்ட திட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள சில வினோத நடவடிக்கைகளுக்கு பிரவேசிப்பதற்காக செலுத்தப்படும் தொகையில் (வினோத வரி தவிர) 15%க்கு சமமான வரியை விதித்து அறவிடல் வேண்டும்.*

*இந்த பிரேரணை அங்கீகரிப்பை வர்த்தமானியில் பிரசுரித்த மாதத்திற்கு முன் பிறக்கின்ற மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் முதலாவது இரண்டு வருடத்தினுள் திரைப்படம் ஒன்றை பார்ப்பதற்கு செலுத்தப்படுகின்ற கட்டணப்படி அறவிடப்படுகின்ற வரித் தொகை அவ்வாறு செலுத்தப்படுகின்ற கட்டணத்தில் 7.5% ஆதல் வேண்டும் என்று சபை கருத்து வெளியிடுகின்றது.*

*அதுல சரத் குமார விஜேசிங்க,*
*முதலமைச்சர் மற்றும் நிதி நிதித்திட்டமிடல் சட்டம்*
*உட்பட சமாதானம், உள்ளூராட்சி மாகாண*
*நிர்வாகம், மனிதவள கல்வி மற்றும் கலாசார விவகாரம்*
*சுற்றாடல் வீடு மற்றும் நிர்மாணத்துறை, கைத்தொழில்,*
*சிறு கைத்தொழில் மற்றும் மகளிர் விவகாரம் அமைச்சர்,*
*வடமேல் மாகாண சபை.*

*பிரதேச சபை,*
*கொபைகனே.*
*2010, யூலை மாதம் 14 ஆந் திகதி.*

*8-571*